# உலகத்தமிழ்

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்



**இதழ் - ௪** | **திருவள்ளுவராண்டு 2050** | **01.01.2020**

***இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்று***
***நெஞ்சில் எண்ணமதைத் திண்ணமுற***
***இசைத்துக் கொண்டு தின்றுவிளை***
***யாடியின்புற் றிருந்து வாழ்வீர் ....***

*— பாரதியார்*





**திரு.க.பாண்டியராசன்**

***தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர்***

## பெரு நிறுவன உலகு

***மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராசன் அவர்கள் இந்திய அலுவலர்கள் சங்கத்தின் 110 ஆம் ஆண்டு மாநாட்டின் தொடக்க விழாவில் பங்கேற்று ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் பின்வருமாறு:-***

*2011-இல் நிதிநிலை அறிக்கைக்கு நான் பதிலளித்துக்கொண்டிருந்தபோது இது நிகழ்ந்தது. திருப்பூரை மையமாகக் கொண்ட சாயப்பட்டறை தயாரிப்பாளர்களுக்கு ரூ.200 கோடி நீண்ட காலக் கடனாக வழங்கப்படும் என்று அவர் அறிவித்திருந்த சூழலில் நடைபெற்றது. சாயப்பட்டறை தயாரிப்பாளர்கள் அருகிலுள்ள நதியை மாசுபடுத்துவதாகக் காணப்பட்டது, உற்பத்தி ஆலைகளில் பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றம் இருந்திருக்க வேண்டும். குஜராத், இந்த பூஜ்ஜிய வெளியேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு புதிய தொழில்நுட்பத்தைக் கொண்டு வந்திருந்தது. எனவே, இந்த மாதிரியைக் கற்க மக்கள் குஜராத்திற்குச் சென்றனர்.*

*அந்த நேரத்தில், மாண்புமிகு முதலமைச்சர், ரூ.200 கோடித் தொகையை நீண்ட கால வட்டியில்லாக் கடனாக அறிவித்தார். இது, ஒரு நல்ல யோசனையல்ல என்று நான் வாதிட்டேன். "எவ்வாறாயினும், அவர்கள் ஆறு தொழிற் குழும நிறுவனங்களாக உள்ளனர். அந்த நிறுவனங்களில் நீங்கள் முதலீடு செய்யுங்கள்"; அந்த நிறுவனங்களுக்கு ரூ.200 கோடியை முதலீடாக அளிப்பதாகவும், ஐந்தாண்டுகள் காலத்திற்குப் பின்னர், அம்முதலீடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்படும் எனவும் வெளிப்படையான அறிக்கை அளிக்குமாறும் கூறினேன். இதை ஒரு மாற்றுக் கருத்தாக நான் பரிந்துரைத்தேன். உண்மையில், இன்று நான் உங்களிடம் செய்வதைப்போல அன்று முன்னிலைப்படுத்தினேன்.*

*இன்று "பெருநிறுவன உலகு" என்னும் வெவ்வேறு பொருள் கொண்ட மூன்று சொற்கள் உள்ளன என்றும், அவர்கள் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்கிற மக்கள் அல்ல எனவும் கூறினேன். நீங்கள் உதவ நினைக்கும் அறுபது நிறுவனங்களும் உண்மையில், உங்களிடமிருந்து கடனை எதிர்பார்க்கவில்லை.*

*அங்கு உருவாக்கப்படும் பொதுவான வசதிக்காக, மத்திய அரசின் ஆதரவு அவர்களுக்கு தேவைப்படுகிறது. அதனைக் கடனாகவோ மானியமாகவோ அல்லாமல் முதலீடு வடிவில் அவர்களுக்கு அளிக்கலாம்.*

**வளரும்...**

## ஆசிரியர் பகுதி

### இனிமையில் கனிவது 2020 !

2020 ஆம் ஆண்டில் இந்தியத் திருநாடு வளர்ந்த நாடாக , வல்லரசு நாடாகப் புகழோடு திகழும்.

திறமையான ஆட்சியமைவும், நிகரற்ற நிருவாகமும் அமைந்து - உலக நாடுகளில் ஒளிர்கின்ற நாடாகப் பாரதம் மிளிரும் என்ற கனவை முன்னாள் குடியரசுத் தலைவர் வலியுறுத்தாத நாளில்லை.

நம் தமிழகம் அந்த வகையில் இந்திய மாநிலங்களில் தலைநிமிர்ந்து நிருவாக மேன்மையில் முதலிடம் பெற்று நிற்கிறது. இது ஈடற்ற பெருமையாகும். புத்தாண்டுப் பரிசாகும்.

தமிழ்மொழி தரணியெங்கும் பரவும் தனிப்பெருமிதத்தை நோக்கித் தமிழ் வளர்ச்சித்துறை பீடுநடை பயில்கிறது. தமிழுணர்ச்சி என்பது அரசையோ நிறுவனத்தையோ - கலைமன்றங்களையோ மட்டும் சார்ந்ததில்லை. நாட்டு மக்கள் அனைவருக்கும் கல்லார்க்கும் - கற்றவர்க்கும் , இளையோர்க்கும் - முதியோர்க்கும் உரிமையுடையது.

அயல்நாடுகளில் வாழும் அனைவரும் உறவினர். அறிவுறுத்தலும் - நம்பிக்கை ஊட்டலும் - மனஅமைதி தருவதும் - ஆறுதல் அளிப்பதும் - எழுச்சி ஊட்டுவதும் - இலக்கியங்களால் அமையும் இயல்புகளாகும். எனவே பொதுமையான தமிழுக்குப் பொலிவூட்ட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ்ப்பண்பாட்டுத்துறை அமைச்சர் திரு.க.பாண்டியராசன் அவர்கள் வலியுறுத்தி வருவதும், மேலும் அவரது மிகப்பெரிய விழைவான ஆயிரம் “தமிழ் வளர் மையங்களும்”, ஆயிரம் “தமிழ்ப்பண்பாட்டு மையங்களும்” மற்றும் பத்து இலட்சம் சொற்களைக் கொண்ட “சொற்குவைத்” திட்டமும் குறிப்பிடத்தக்கன.


கல்விப்பயிற்சியும் - கலைமுயற்சியும் - அறிவார்வமும் - ஆய்வுப் போக்கும் - மொழியாக்கமும் - முடிவைத்தொடும் நோக்கமும் புதுமை அலைகளுக்கு வழிவகுக்க வேண்டும் .

ஓங்கி உலகளந்த பெருமை நம் தமிழுக்கு வாய்க்குமாக !

புத்தாண்டே வருக ! புத்துணர்ச்சி மலர்க !!

## உலகளாவிய தமிழ் அமைப்புகள்

முனைவர் வா.மு.சே.முத்துராமலிங்க ஆண்டவர்
தமிழ் இணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி,
சென்னை.



உலகத் தமிழ் மறைக் கழகம், உலகத் தமிழ் மன்றம் அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மன்றம் (*International association of Tamil Research*) பன்னாட்டுத் தமிழுறவு மன்றம், உலகத் தமிழின முன்னேற்றக் கழகம், உலகத் தமிழர் மாமன்றம், பன்னாட்டு தாரணித் தமிழர் கூட்டணி போன்ற ஏனைய அமைப்புகள் தோன்றி வளர்ந்துள்ளன. இவ்வமைப்புகளையும் உலக நாடுகளில் தொடங்கப்பட்ட தமிழ்ச் சங்கங்களையும், ஒருங்கிணைக்கும் மாபெரும் பணியினை உலகத் தமிழ்ச் சங்கம் செய்ய வேண்டும்.

இக்கருத்தினை முதல் அமைப்பான தமிழ் மறைக் கழகத்தினை தோற்றுவித்த கழகத் தமிழறிஞர் க. பொ. ரத்தினம் அவர்களின் பேராவல். 1981 ஆம் ஆண்டு ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டின் போது மேனாள் முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் அறிவிக்கப்பட்டு தொடங்கப்பட்டு இன்றைய தமிழக அரசினால் செயலாக்கம் பெற்றுள்ளது.

உலகெங்கும் வாழும் தமிழர்களின் பட்டியல் முறையான நம்பகமான முறையில் தொகுக்கப்பட வேண்டும். உலகில் தமிழும் தமிழரும் என்ற டாக்டர் பொற்கோ அவர்களின் நூலும், டாக்டர் கடிகாசலம் அவர்களின் நூலும் காந்தளகம் வெளியீடாக வந்த நூலும் நமக்கு சிறப்பான விவரங்களைத் தருவதாக இருந்தாலும் இன்று வரை தமிழர்கள் பல்வேறு காரணங்களால் புலம் பெயர்ந்து அயல் நாடுகளில் வாழ்ந்து வருகின்ற தமிழர்கள் பற்றிய முழு விவரம் தமிழ்நாட்டரசின் கூட்டு முயற்சியால் சிறப்பாக இனிமேல் தான் உருவாக்கப்பட வேண்டும்.

....வளரும்

# ஔவையார்

## ஆத்திசூடி | ATTISUDI

| آثي سودي | 阿媞邱立

ആത്തി ചൂടി | आत्तिचूड़ी | ఆత్తిచూడి |

ಆಭೂಡಿ

### ஈவது விலக்கேல்

**Never prevent charity**

لا تجتنب من العطاء

不忘施捨

കൊടുക്കുന്നത് തടയരുത്

अगर कोई दान दें तो मत रोकें |

ఒకరు మరొక్కరికి చేయు ధర్మాన్ని ఆపకు

ಒಬ್ಬರು ಮತ್ತೊಬ್ಬರಿಗೆ ಮಾಡೋ ಧರ್ಮವನ್ನ ತಡೆಮಾಡಬೇಡ



பிரெஞ்சு கலைக்கழகம் | முனைவர் ந.அருள் □ய□குந□ மொ□பெய□□□□துறை



### அறிவியல் நிறுவனம்

*கால்பெர்ட் 1666ஆம் ஆண்டு கால்பர்ட் இந்நிறுவனத்தைத் தொடங்கினார். அறிவியல் மற்றும் அதன் பயன்பாடுகளின் வளர்ச்சி மற்றும் அதன் பரவலாக்கத்திற்கெனத் தொடங்கப்பட்டதாகும். இந்நிறுவனம் மேற்கொள்ளும் ஆய்வுகளும், விவாதங்களும் கலந்துரையாடல்களும் சமுதாயக் கட்டமைப்பிற்கு வகை செய்வதுடன் குறிப்பாக அரசு சார்ந்த அமைப்புகளுக்கு நிபுணத்துவம், ஆலோசனை மற்றும் எச்சரிக்கை கட்டமைப்புடன் வகை செய்கிறது. வாழ்க்கை அறிவியலை ஊக்குவிப்பதும், அறிவியல் கற்பித்தலை வளர்க்கவும், அறிவு பரிமாற்றமும், இவை குறித்த பன்னாட்டு இணைவாக்கத்தை ஊக்குவிப்பதும் இதன் நோக்கமாகும். இந்நிறுவனம், 273 உறுப்பினர்களையும், 124 அயல்நாட்டு நிருவாகிகளையும் 76 நிறுவனப் பேராளர்களையும் கொண்டுள்ளது.*

### கவின் கலை நிறுவனம்

*1816ஆம் ஆண்டிலிருந்து முதல், கவின் கலை நிறுவனம் என அறியப்படும் இந்நிறுவனம், 17ஆம் நூற்றாண்டில் தோற்றுவிக்கப்பட்ட இசை மற்றும் கட்டடக்கலையின் ஓவியம் மற்றும் சிற்பக்கலையின் அரச குல நிறுவனத்தின் வழிதோன்றலாகும். பல்வேறு போட்டிகளை நடத்துதல், பரிசுகளை வழங்குதல், கலைஞர்களின் குடியிருப்புகளுக்கு நிதியளித்தல் உதவித்தொகை அளித்தல் ஆகியவற்றின் வாயிலாக ஒவ்வொரு வெளிப்பாடுகளிலும், கலைநயமிக்க படைப்புகளை வெளி கொண்டு வருவதற்கு இந்நிறுவனம் ஊக்குவிக்கிறது. மேலும், பிரெஞ்சு பண்பாட்டு பாரம்பரியம் பாதுகாக்கப்படுவதையும் இது கண்காணிக்கிறது. இது பொது அதிகாரிகளுக்கான ஒரு ஆலோசனை அமைப்பாகும். கலை சார்ந்த விவகாரங்களையும் இது கருத்தில் கொள்கிறது. இன்று, சட்டப்படியான 59 உறுப்பினர்களையும், 16 அயல்நாட்டு நிருவாகிகளையும் 59 நிறுவனப் பேராளர்களையும் இந்நிறுவனம் கொண்டுள்ளது.*

தொடரும்...



## தமிழ்த் தூது

### தனிநாயக அடிகள்




தமிழருள் பலரும், தமிழர் அல்லாதார் சிலரும், தத்தம் இயல்பிற்கு ஒவ்வும் வகையிலெல்லாம் தமிழுக்காக அரும்பணியாற்றி வருகின்றனர். இவருள், வேற்று மொழிகளுடனும், நாடுகளுடனும், மக்களுடனும் தொடர்புடைய என்னைப்போன்ற தமிழர், தமிழ்மொழி, நாடு, இனம் ஆகிய இவை மூன்றின் மாண்பை ஒப்பு நோக்கி அறிந்து, அதனைத் தமக்கிசைந்த அளவு பிறர்க்குக் கூற விரும்புவதில் யாதும் வியப்பின்று.

இத்தகைய தொண்டில் முதன்முதல் ஈடுபட்டவர், அந்தணரும், குறிஞ்சிப் பாட்டினை இயற்றி, ஐந்திணை இலக்கணம் ஆரிய மன்னர்க்குப் புகட்டியவருமாகிய கபிலராவர். வேற்று நாடுகளுக்கு ஒருவாறு தமிழின் பெருமையை காட்டியவர், ஈழ நாட்டவரும், இந்தியக் கலைகளில் இணையற்ற தேர்ச்சி பெற்றவருமாகிய ஆனந்தக் குமாரசுவாமியாவர். இவரிருவருடைய காலத்துக்குள் இதே நோக்கத்துடன் பலர் உழைத்திருக்கின்றனர். இப்பலருடைய அறிவும் ஆற்றலும் படைத்தேனல்லேனாயினும், உலகச் செலவு செய்து, தமிழ்க் கலைத்தூது நிகழ்த்த நானும் வாய்ப்புப் பெற்றேன் என்று பெரிதும் உவந்து, அத்தொண்டினை மணமற்ற சிறு மலர் போன்று தமிழன்னையின் துணை மலரடிகளில் வைக்கின்றேன்.

இத்தொண்டு இக்காலத்து இன்றியமையாது வேண்டுமோவெனின், இன்றியமையாது வேண்டும். உலக மொழிகளின் பிறப்பைக் கண்டும், அவை சிதையவும், மாறவும், வழக்கொழியவும், தான் என்றும் தன் கன்னித் தன்மையைக் காத்து வருகின்ற தமிழன்னைக்கு, இன்று இடுக்கணும் இடும்பையும் நேர்ந்துள்ளன. தமிழன்னை மீது பல்வேறு நிலையினர் அறிந்தும், அறியாதும் படையெடுத்துள்ளனர். இப்பகை எல்லாவற்றையும் புறங்காணும் கருவி தமிழ்த்தூதுவரின் கருத்து வளமே என நம்புகிறோம்.

இனி, மேனாட்டு மொழியாராய்ச்சியாளரும் இலக்கிய ஆராய்ச்சியாளரும், இந்தியப் பண்பினை அறிவதற்கு வடமொழி இலக்கியப் பயிற்சியே சாலும் எனக் கருதி அதனை மட்டும் கற்று வருகின்றனர். தமிழ்க்கலையின் தனித்தன்மையை இவர் உணர்ந்திலர். இவர்க்கு உணர்த்துவாரும் இலர். மேல் நாடுகளில் வெளிவந்துள்ள இந்திய இலக்கிய வரலாற்று நூல்களில், தமிழிலக்கியம் பற்றிய கருத்துகள் சிறிய அளவில் இடம்பெற்று வருகின்றன. ஒரு சொல்லேனும் இல்லை.

வளரும்...





ஓவியமா ! காவியமா !



சித்தன்னவாசல்

©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 15.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 47] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 5, 2012
கார்த்திகை 20, திருவள்ளுவர் ஆண்டு – 2043

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை.**

**அறிவிக்கைகள்.**

*[அரசாணை (நிலை) எண் 70, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (M–2)த் துறை, 26 ஆகஸ்ட் 2011.]*

1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 63/1948) 112 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ் நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1950 ஆண்டு தொழிற்சாலைகள் விதிகளில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார். இதன் வரைவு அறிவிக்கை மேற்சொன்ன சட்டத்தின் 115 ஆம் பிரிவில் சொல்லியுள்ளவாறாக ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தம்**

மேற்சொன்ன விதிகளில், 95 ஆம் விதியுடன் இணைக்கப்பட்டுள்ள விவர அட்டவணை (xxiv) இல், 10 ஆம் பத்தியில், இனம் (l)—க்கு பின்னர், கீழ்காணும் இனங்கள் சேர்த்து கொள்ளப்பட வேண்டும்.

அவையாவன:—

(*m*) இரசாயனப் பொருளைக் கலக்குகிற கொட்டகை மற்றும் இராசயனப் பொருளை நிரப்புகிற கொட்டகை அகியவற்றின் ஓசை பரவுவதை தடுக்கும் அமைப்பின் மீது தாமிரத் தகடுகள் பொருத்தப்பட வேண்டும். அந்தக் கொட்டகைகளில் நுழைவதற்கு முன்னர் தொழிலாளர்கள், தங்களுடைய உடலிலிருந்து நிலைமின்னியல் ஆற்றலை வெளியேற்றுவதற்காகவும், விரும்பத்தகாத, தீ விபத்து அல்லது வெடி விபத்திலிருந்து தங்கலைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தங்களுடைய கைகளை தாமிரத் தகடுகளின் மீது வைக்க வேண்டும்.

(*n*) 55 வயதுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள், வெடி மருத்துப்பொருள் இல்லாத பகுதிகளில் மட்டுமே நியமிக்கப்பட வேண்டும்,

(*o*) நிறத்தை கண்டறிவது உள்ளிட்ட கண்பார்வை குறைபாட்டை அல்லது செவிப்புலன் குறைபாட்டைச் சரி செய்வதற்கான சாதனங்களுடன் அல்லது சாதனங்களைப் பயன்படுத்தாமல் பணிபுரிவதற்கு, முறையே தகுதிபெற்ற கண் மருத்துவர் மற்றும் காது, முக்கு, தொண்டை மருத்துவர் ஆகியோரால் பரிசோதனை செய்யப்பட்டு தகுதியானவர் என்று அறிவிக்கப்பட்டாலன்றி மற்றபடி, 50 வயது மற்றும் அதற்கும் மேற்பட்ட வயதுடைய யாதொரு நபரும் பட்டாசு தயாரிப்பு தொழிற்சாலையில் பணியில் அமர்த்தப்படக்கூடாது. இத்தகைய பரிசோதனைகள், இரண்டாண்டுகளுக்கு ஒருமுறையாவது நடத்தப்பட வேண்டும். ஆய்வின்போது, ஆய்வாளர்கள் கேட்பதன் பேரில், மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை அல்லது மறுபரிசோதனை பதிவுரு அளிக்கப்படவேண்டும்.

(*p*) கலக்குகிற மற்றும் நிரப்புகிற வேலைகளுக்கு, பெஞ்சுக்கும் மேசாக்கும் வகை செய்யப்பட வேண்டும்.

## இவ்வார நிகழ்வுகள்

**01.01.2020**











**01.01.2020**




**01.01.2020**




**02.01.2020**



# இவ்வார நிகழ்வுகள்

## 02.01.2020





## 03.01.2020







## 04.01.2020










## 05.01.2020




**04.01.2020** **05.01.2020**










***"தமிழ் மலையாளம் அகராதியியல் பயிற்சி பட்டறை அறிவிப்பும் அழைப்பும் "***

***நாள் : 07.01.2020 முதல்-10.01.2020 வரை***
***இடம் : கேரளப் பல்கலைக்கழகம்***

***மேலும் விவரங்களுக்கு***
***முனைவர் ஹெப்சி ரோஸ் மேரி-அ 9495656167***
***முனைவர் அ. பிரசில்லா +919496814309***

*திங்கள் அமர்வு—29 அழைப்பு*

*நிலம்:*
*தவத்திரு.சாந்தலிங்க அடிகளார் தமிழ்க்கல்லூரி*
*பொழுது: தி.பி.2050 சிலை---(மார்கழி) ஞாயிறு (05-01-2020) காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை*

***தொல்காப்பியத்தில் -- நிலப்பாகுபாடு***

***குறளிசைக்கூடு நடத்தும் இலக்கிய விழா***
*இடம் : அருள்மிகு ஊத்துக்காட்டு மாரியம்மன் ஆலயம்,*
*செல்லப்பெருமாள் பேட்டை,*
*புதுச்சேரி-8.*
*நாள் : 04.01.2010, மாலை 06.00 மணி*

***கம்பன் கழகம் நடத்தும் மாதச் சொற்பொழிவுக் கூட்டம்***
*இடம் : கார்த்திகேயன் தொடக்கப்பள்ளி, காந்தி சதுக்கம் அருகில்,*
*மகர் நோன்புப் பொட்டல், காரைக்குடி.*
*நாள் : 04.01.2020, மாலை 04.00 மணி*

***திருமுறை அருட்பணி அறக்கட்டளை நடத்தும் 15 ஆம் ஆண்டு விழா***
*இடம் : சாய் மனோன்மணி சண்முகம்,*
*திருமணமாளிகை,*
*அரசு நகர், கீழ்ரோடு, காஞ்சிபுரம்.*
*நாள் : 04.01.2020, காலை 07.00 மணி*

***கருவூர் திருக்குறள் பேரவையின் 34 ஆம் ஆண்டு விழா***
*இடம் : நகரத்தார் சங்க மண்டபம், சன்னதித் தெரு,*
*கருவூர்.*
*நாள் : 05.01.2020, காலை 09.00 மணி*

***உலகத்திருக்குறள் பேரவை நடத்தும் தொல்காப்பியம் தொடர் வகுப்பு.***
*இடம் : வீரராகவ மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர்.*
*நாள் : 05.01.2020, மாலை 05.00 மணி*

**தங்கள் மின்னிதழை தவறாமல் பெறுவதற்கு விரும்புகின்றேன். இதே மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்க முடியுமா?**
**பணிசிறக்க வாழ்த்துக்கள்..**

— Dr Mrs SUHANYA Aravinthon
Senior Lecturer - Dept. of Music,
University of Jaffna, Sri Lanka.

**வணக்கம் சார்.**

**கிருஸ்துமஸ் வாழ்த்துகள்.**

**உலகத்தமிழுக்கு ஏதேனும் கட்டுரை வேண்டுமா?**

--- பேரா.சச்சிதானந்தம், பிரான்சு.

**Iyya Vanakkam,**

**Thank you so much for the information. Please see the attached files for your kind attention and records.**

For and on behalf of Bhopal Tamil Sangam
Executive Committee
A.Swamidurai, General Secretary— 9303104208

**நல்ல முயற்சி. அறிவிப்புகள் ஓரிடத்தில் காணக்கிடக்கின்றன. மகிழ்ச்சி. உலகத்தமிழின் நோக்கம், இடம்பெற வேண்டிய செய்திகள், முக்கியத்துவம் கொடுக்க வேண்டியவை குறித்த வரையறை போன்றவை இருந்தால் பயனுள்ளவையாக இருக்கும்.**

-- பேரா.மணவழகன், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம்.

**அருமை.**

-- திருமதி.பிந்து.

செந்தமிழ் சொற்பிறப்பியல் அகலமுதலி இயக்ககம்.

**உலகத்தமிழ் மூன்றாம் மின்னிதழ் முழுமதியாய் ஒளி பாய்ச்சுகிறது. இலக்கு நோக்கிய முடிவில், உலகத்தமிழர்கள் ஆர்வமிகுதியால் இடறிவிடக்கூடாது என்ற ஆசிரியரின் கூற்று, தமிழை யாவரும் எழுதும்போது கிஞ்சிற்றும் பிழை நேர்ந்துவிடக்கூடாது என்பதில் அவர் கொண்டுள்ள அக்கறையை பறைசாற்றுகிறது. தமிழுலகம், மின்னிதழ் ஆசிரியரின் பணி வீறு நடை போட வேண்டும் என வாழ்த்தும்...**

--- திருச்செல்வன் நடராஜன், துணை இயக்குநர்,
மொழிபெயர்ப்புத்துறை

**Good Morning Anna,**
**Will you place our college advertisements in Ulagathamizh e-Paper ?**

-- Mr.Moovendan.

**Awesome,**

Tmt.Suganya Sriram.

**நன்றி. பணிகள் மென்மேலும் சிறப்புற தொடர வாழ்த்துகள்**

--- திரு.பொன்.சின்னதம்பி முருகேசன்.
மொழிபெயர்ப்பாளர்.

**இந்திய அலுவலர் சங்கத்தின் *110*-ஆவது மாநாட்டில் பேசிய மாண்புமிகு தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் உரை அருமையாக இருக்கிறது.தொடர்ந்து வெளியிடுங்கள்.....**

— கவிஞர் பேரா தலைவர் பொதிகைத் தமிழ்ச் சங்கம்
திருநெல்வேலி.

**ஐயா வணக்கம். உலகத் தமிழ் மின்னிதழ் தொடக்கம் அருமை. தங்களின் உன்னதமான தமிழ்ப்பணிக்கு வாழ்த்துக்கள். உலகத் தமிழ்ச் செய்திகளை உள்ளங்கையில் மணக்கச் செய்கிறது. சிறப்பு.**

—முனைவர் நா.சுலோசனா
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

**உலகத்தமிழ் மின்னிதழ் மிகச் சிறப்பாக அமைந்து வருகிறது. ஒவ்வோர் இதழிலும் நீண்ட காலமாக தமிழுக்கு சேவையாற்றும் ஒரு தமிழ்ச்சங்கத்தை விரிவாக அறிமுகம் செய்யலாம். அன்புடன்,**

— திரு.குறிஞ்சிவேலன், ஆசிரியர்
திசையெட்டும், குறிஞ்சிப்பாடி.

**அருமை அருள்...!**
**நத்தார் நன்னாளில் கண்ணதாசனின் ஏசு காவிய வரிகள் சிறப்பு...!**

-- வழக்கறிஞர் த.இராமலிங்கம்.

**நத்தார் என்ற சொல் கிறித்துமசு என்ற சொல்லின் மொழியாக்கம் என்ற செய்தி அரியச் செய்தது உலகத்தமிழ் மின்னிதழ். நன்றி. மின்னிதழ் மிளிர்கிறது ஐயா.**

-- திரு.சாலமோன் ராஜா.

**மிக்க மகிழ்ச்சி. வாழ்த்துக்கள்.**
**சகோதரா, வாழ்க தமிழ்.**

—திருமதி.அம்பாள் அடியாள், செருமனி.

**வணக்கம்.**
**இது உங்கள் பொறுப்பிலிருந்து வெளிவருவதா?**
**அருமையாக உள்ளது.**

-- பேராசிரியர் விஷ்ணுகுமாரன்,
தமிழ்த்துறை,
திராவிடப்பல்கலைக்கழகம், குப்பம்.
ஆந்திரப்பிரதேசம்.

**அருமை. வாழ்த்துகள்**

-- முனைவர் பசும்பொன்,
மேனாள் தனி அலுவலர்,
உலகத்தமிழ்ச்சங்கம், மதுரை.

**மணம் மகிழ்கிறது.**

-- திரு.கண்ணன்,
செந்தமிழ் சொற்பிறப்பியல் அகலமுதலி இயக்ககம்.

**Good morning Dr.Arul. Ulagathamizh has come out well best wishes of the season,**
... Kumar Thiyagarajan,
Times of India, Delhi.

**வாழ்த்துகள்**.
-- மெய்ஞானி பிரபாகர் பாபு.

**நன்றி. ஐயா.**
-- திரு.வெற்றிவேல்,
மொழிபெயர்ப்பாளர்,
சென்னை உயர்நீதிமன்றம்.

**நன்றி. ஐயா.**
**சென்ன மூன்று வாரங்களாக மேற்கு ஆப்பிரிக்க நாடுகளுக்குச் சென்றிருந்தேன். கேப் வர்தே நாடு, செனகல், கினியா, கினியா பாசு, ஐவரி கோஸ்ட், கானா. வேளாண்மைக்காக. தற்பொழுது சிங்கையில் உள்ளேன்.**
-- திரு.சேது குமணன்.

**அருமை அண்ணா.**
**உலகத்தமிழ் மின்னிதழை அயலகத்தளங்களில் பகிர்ந்துள்ளேன்.**
-- பேராசிரியர்.குறிஞ்சி வேந்தன், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை.

**முகத்தில் கருத்தொளி ஒளிக்கிறது.**
**நன்றி.**
-- திருமதி.வாசுகி கண்ணப்பன்.

**சூப்பர் சார்.**
-- திரு.பிரவின், தினமணி, சென்னை.

**முத்தான**
**மூன்றாம் இதழ்.**
**மெருகேறும்**
**மலர்ச்சி**
**மனத்தில்**
**மகிழ்ச்சி.**
**வானளாவிய**
**வாழ்த்துகள்**
--- திரு. ரியாஸ், நடுப்பக்க ஆசிரியர், தினசெய்தி நாளிதழ்.




**வாழ்வும் இலக்கியமும்**

**வாழ்க்கைச் சிறப்பை, அதன் நீள அகலங்களை, இவ்வுலகில் ஆறாக ஓடிக் கொண்டிருக்கும் அதன் வற்றா மூலவூற்றை இலக்கியங்கள் என்பனவே தொட்டும் தொடர்ந்தும் காட்டுகின்றன என்று பலவேளைகளில் நான் கருதுவேன்.**

***--- கலைச்செம்மல் எஸ்.டி.காசிராஜன், இ.ஆ.ப.,***
***18.02.1987***
*(உ.வே.சா. ஒரு தமிழ் வாழ்வு நூலிலிருந்து...)*